EASTERN UNIVERSITY, SRI LANKA
FACULTY OF COMMERCE AND MANAGEMENT

LIBRARY
03 AUG 2010
Eastern University, Sri Lanka.

EXTENSION PROGRAM

First Semester Examination in Certificate in Business Administration (CBA) -
2004, 2005 & 2006. (Repeat - June 2010)

CBA 1013 – Economic Theory

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக நேரம்: 3 மணித்தியாலம்

---

O1. பின்வரும் பொருளாதார எண்ணக்கருக்களை விளக்குக.

a. பொருளாதார வளங்கள்.
b. அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள்.
c. குறைந்து செல்லும் எல்லைப்பயன் விதி.
d. வருமான விளைவும் பதிலீட்டு விளைவும்.
e. கேள்வி விதி
f. குறுங்கால உற்பத்தி தொழிற்பாடு.
g. நிறுவனம் ஒன்றின் எல்லைச் செலவு
h. அளவுத்திட்ட விளைவு விதிகள்.
i. நுகர்வோன் மிகை
j. பேரினப் பொருளாதார இலக்குகள்.

(2 x 10 = 20 புள்ளிகள்)

02.

i. மொத்தப் பயன் எல்லைப்பயன் என்ற எண்ணக்கருக்களை வேறுபடுத்தி விளக்குக
(6 புள்ளிகள்)

ii. பகுத்தறிவான நுகர்வோன் ஒருவன் கொள்வனவு செய்யும் X, Y ஆகிய இரண்டு பொருட்களின் நுகர்விலிருந்து கிடைக்கும் பயன் மட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

$$MU_X = 60 - 5X$$
$$MU_Y = 80 - 10Y$$

X பொருளின் விலை 5 ரூபா எனவும் Y பொருளின் விலை 10 ரூபா எனவும் நுகர்வோனின் வருமானம் 110 ரூபா எனவும் கொள்க.

உச்சப்பயன் சமநிலையில் பகுத்தறிவுள்ள நுகர்வோன் ஒவ்வொரு பொருளிலும் எவ்வளவு தொகையினைக் கொள்வனவு செய்வான் எனக் காண்க
(14 புள்ளிகள்)

03. i.. சமபயன் கோடு, சம செலவுக் கோடு என்பவற்றை வேறுபடுத்துக.
(06 புள்ளிகள்)

iii. சமபயன் கோட்டின் இயல்புகளை விளக்குக.
(06 புள்ளிகள்)

iii. சமபயன் ஆய்வினைப் பயன்படுத்தி கேள்விக் கோடு ஒன்றினைப் பெறும் அணுகுமுறையினை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.
(08 புள்ளிகள்)

04. i. நிறைபோட்டிச் சந்தையொன்றின் இயல்புகள் எவை?.
(06 புள்ளிகள்)

ii. நிறைபோட்டிச் சந்தை ஒன்றினையும் தனியுரிமைச் சந்தை ஒன்றினையும் எவ்வாறு வேறுபடுத்துவீர்?
(06 புள்ளிகள்)

iii. மேற்படி இரு சந்தைகளினதும் குறுங்கால சாதாரண இலாபச் சமநிலைகளை விளக்குக.
(08 புள்ளிகள்)

05. i. சர்வதேச வர்த்தகம் என்பதால் கருதப்படுவது யாது? சர்வதேச வர்த்தகத்தினை தீர்மானிக்கும் காரணிகளைத் தருக.
(06 புள்ளிகள்)

ii. சர்வதேச வர்த்தகம் பற்றிய ஒப்பீட்டு நன்மைக் கோட்பாட்டினை கருதுகோள் ரீதியான உதாரணத்துடன் விளக்குக.
(08 புள்ளிகள்)

iii. ஒரு நாடு சர்வதேச வர்த்தகத்தில் இணைந்து கொள்வதால் ஏற்படும் நன்மை தீமைகளை விளக்குக.
(06 புள்ளிகள்)